ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂமானது

අංක 1718/6 - 2011 අගෝස්තු 08 වැනි සඳුදා - 2011.08.08

*1718/6 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***(40 ஆம் அத்தியாயம்) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்***

*(40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2011, ஒகத்து 08.*

***ஒழுங்குவிதி***

இவ்வொழுங்குவிதி "2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, அவசரகால (உள்ளூரதிகார சபைகளை நிர்வகித்தல்) ஒழுங்குவிதி" என எடுத்துக்காட்டப்படலாம்.

*2. அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், அத்துடன் இவ்வொழுங்குவிதி வலுவிலிருக்கும் காலத்துக்கும் அக்காலம் வரையும் மட்டுமே, முறையே இவ்வொழுங்கு விதிக்கான அட்டவணை I, அட்டவணை II, அட்டவணை III என்பவற்றிற்கு குறித்துரைக்கப்பட்ட விடயத்துக்கேற்ப, மாநகர சபைகளின், நகர சபைகளின் மற்றும் பிரதேச சபைகளின் சபை உறுப்பினர்களின் அல்லது உறுப்பினர்களின் பதவிக்காலம் 2011, ஒகத்து மாதம் 10 ஆந் திகதியன்று முடிவுறுதல் வேண்டும்.*

*3. 2011, மாச்சு 30 ஆந் திகதி, 1699/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அவசரகால (உள்ளூரதிகார சபைகளை நிர்வகித்தல்) ஒழுங்குவிதி இத்தால் நீக்கப்படுகின்றது.*

## அட்டவணை I

### மாநகர சபைகள்

1. தெஹிவளை-கல்கிசை மாநகர சபை
2. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை
3. மொறட்டுவ மாநகர சபை
4. நீர்கொழும்பு மாநகர சபை
5. கம்பஹா மாநகர சபை
6. காலி மாநகர சபை
7. மாத்தறை மாநகர சபை
8. கண்டி மாநகர சபை
9. மாத்தளை மாநகர சபை
10. நுவரெலியா மாநகர சபை
11. குருநாகல் மாநகர சபை
12. பதுளை மாநகர சபை
13. இரத்தினபுரி மாநகர சபை
14. அநுராதபுரம் மாநகர சபை
15. கல்முனை மாநகர சபை

## அட்டவணை II

### நகர சபைகள்

1. கொலன்னாவ நகர சபை
2. ஹம்பாந்தோட்டை நகர சபை

## அட்டவணை III

### பிரதேச சபைகள்

1. கொட்டிகாவத்தை-முல்லேரியா பிரதேச சபை
2. சூரியவெவ பிரதேச சபை
3. ஹம்பாந்தோட்டை பிரதேச சபை
4. குண்டசாலை பிரதேச சபை
5. கண்டி பட்டினமும் சூழலும் மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபை

8-611

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.